உ
கணபதிதுணை.

# வித்யாபாநு

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

| தொகுதி | பிங்கள௵ மார்கழிமீ | பகுதி |
| --- | --- | --- |
| 9 | January 1918 | 12 |


## ஆங்கிலப்பாதிரிகளின் ஆதிக்யமும்

### ஆங்கிலக் கல்விமுறையின் ஸ்தாபனமும்.

உலகத்தின் நவீன சரித்திரங்களில் 1498௵ மேமீ 20உ ஒரு குறிப்பிடத்தகுந்த நாளாகும். இந்தத்தினத்தில் தான் வாஸ்கோடிகாமா என்னும் போர்த்துகேசிய வியாபாரத்தலைவன், ஐரோப்பாவிலிருந்து கடல்மார்க்கமாக நெடுநாள்பயணஞ்செய்து கள்ளிக்கோட்டைக்குச்சமீபத்தில் வந்து இறங்கினான். 1505வருஷத்தில் ஒரு போர்த்துகேசிய பிரதிநிதி அங்கு ஸ்தாபிக்கப்பெற்றார். சில வருஷங்களுக்குள் போர்த்துகேசியர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரை யோரங்களில் தங்களது பூர்ணமான ஆதிக்யத்தை நாட்டி அங்கு கோவா என்னும் ஒரு தலைநகரையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். அடுத்த முப்பது வருஷங்களுள் வங்காளத்திலும் வந்து குடியேறிவிட்டார்கள். இப்படி அவர்கள் வியாபாரிகளாகவும் அதிகாரிகளாகவும் இந்தியாவில் ஆதிக்யம் பெற்றபிறகு தங்களது பிரதிநிதியாகிய காஸ்ட்ரோ என்பவரின் மூலமாக ஒரு மதபோதனை ஸபையையும் ஏற்படுத்தினார்கள்.

அதுவரையில் இங்குவந்து தங்கியிருந்த போர்த்துகேசியப் பாதிரிமார்களெல்லோரும்! தங்கள் வகுப்பினருக்குமட்டுமே உப

தேசம்செய்யும் முறையில் அடக்கியிருந்தார்கள். ஆனால் முன் குறிக்கப்பெற்ற காஸ்ட்ரோவுக்கு மிகவும் நட்பினரான S. பிரான்ஸிஸ்க் ஸேவியர் என்பவரது பெருமுயற்சியாற் பாதிரிகளுடைய மதோபதேசப் பெருக்கமானது இந்துக்களுக்குள்ளும் பரவத் தலைப்பட்டது. மலையாளக்கரையும் மதுரைஜில்லாவின் தென்பாகங்களும் அவர்களது உபதேசத்துக்குக் கீழடங்கிநின்றன. போர்த்துகேசியர் தமது மதக்கொள்கைகளுடன் தமது பாஷையையும் பரவச்செய்தார்கள். அதற்காகவென்றே ஒரு அச்சியந்திரசாலையையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். தங்களது மதக்கொள்கைப்படி வணக்கம் செய்யத்தக்க ஒருகோயிலை ஸ்தாபித்ததாகிய பெருங்காரியத்துடன் நில்லாமல் ஸம்ஸ்க்ருதம் தமிழ் மலையாளம் சிரியம் முதலிய பாஷைகளையும் பயின்றுவரத் தலைப்பட்டார்கள். கடைசியிற் குறிக்கப்பட்ட சிரியம் என்னும் பாஷையானது மலையாளக்கரையில் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற சிரியன் கோவிலாரால் பேசப்பட்டு வருவதொன்று. அந்தக்கோயில் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று ஆறுவது நூற்றாண்டு முதல் இன்னும் அங்கு நிலவிவருகின்றது. மேற் குறிக்கப்பெற்ற பாஷைகளில் தங்ளது மதக்கொள்கைகளையும் அச்சடித்துப் பரவச்செய்தனர். இந்தக் கோயிலையொட்டி ஆங்காங்குப் பல சிறுகோயில்களும் மதஸங்கங்களும் விரைவில் ஸ்தாபிக்கப்பெற்றன. ஒவ்வொரு ஸங்கத்துக்கும் தலைவராக ஒவ்வொரு பாதிரி நியமிக்கப்பெற்றார். ஒவ்வொருஸங்கத்தின் அநுஸரணையின் பேரிலும் ஒவ்வொரு தர்மபாடசாலையும் ஸ்தாபிக்கப்பெற்றது. இந்தச் சிறுபாடசாலைகள் தவிரப் பெரிய பள்ளித்தானங்களும் ஏற்படுத்தப்பெற்றன.

1580-ம் வருஷத்தில் ஸ்பெயின் தேசத்தினரும் போர்த்துகல் தேசத்தினரும் மிகவும் உறவாடி ஒரு அரசாங்கமாக ஆளும் முயற்சியில் முந்தினபோது அப்போதிருந்து வந்தவரான பிலிப் என்பவர் பிறமதத்வேஷத்தை மிகுதியும் காட்டிவந்த படியால் போர்த்துகேசியரது ஆதிக்யம் அதிக விரைவிற் குறையத் தலைப்பட்டது. முதன் முதல் டச்சுக்காரர்களால் அவர்களது வியாபாரமுறை தடைப்பட்டது. என்றாலும் டச்சுக்காரர்களும் வெகுநாள் தங்க

ளது ஆதிக்யத்தைக் காட்டமுடியவில்லை. ஏனெனில், அவர்கள் ஆரம்பமுதல் ஆங்கிலேயர்களுடன் வாதிக்கும்படி நேர்ந்தது. ஸ்பானியர்களை ஆங்கிலர்கள் 1588-ம் வருஷத்தில் தோல்வியடையச் செய்திருந்து, ஆங்கிலர்க்குக் கடலில் நீண்ட ஆதிக்யம் கிடைத்தது. அதனால் அவர்கள் ஒருராஜ்யஸ்தாபனத்தைச்செய்வதற்கும் அடிகோலினார்கள்.

1600-ம் வருஷம் டிசம்பர்மீ 31உயில் எலிஜபத் மஹாராணியார் தமது அரசாட்சிமுறைக்கு ஒரு பெரும் எடுத்துக்காட்டான ஈஸ்ட் இந்தியா கம்பெனி என்னும் ஒரு வியாபாரச் சங்கத்தை நியமித்து அதனைத் தூண்டிவிட்டார்கள். அந்தக்கம்பெனி இந்தியாவுக்கு வந்தேறிய சிலவருஷங்களுக்குள்ளாகவே இந்தியாவின் மேற்குக்கரை கிழக்குக்கரை வடஇந்தியா முதலிய இடங்களில் தங்களது பண்டசாலைகளை ஸ்தாபித்து வியாபாரத் தேர்ச்சியும் பெற்றுத் தங்களது ஆதிக்யத்தையும் நாட்ட ஆரம்பித்தனர். 1640-ம் வருஷத்தில் சென்னையில் செண்ட் ஜார்ஜ்கோட்டையைக் கட்டினார்கள். இது 1653-ம் வருஷத்திற்குள் ஒரு இராஜதானியாகவும் செய்யப்பட்டது. 1687-ம் வருஷத்தில் பம்பாயிலும் இராஜதானியை ஏற்படுத்திக் கொண்டார்கள். மூன்றுவருஷகாலத்திற்குள் ஜாப் கர்ணக் என்பவரால் கல்கத்தாவுங் கண்டுபிடிக்கப் பட்டது. பெரும்பாலும் இந்தக்காலத்திலேயே அந்தக் கம்பெனியார் தங்களுக்குற்ற ஆதிக்யத்தைக்கொண்டு இந்தியாவில் சக்ராதிபத்யத்தையும் ஸ்தாபிக்கத் தீர்மானித்து, அதற்கு முக்கியஸ்தானங்களாகச் சென்னை, பம்பாய், கல்கத்தா என்னும் மூன்று இடங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதுமுதல் அவர்களுடைய மதசம்பந்தமான முயற்சியும் உறுதிகொள்ளத் தலைப்பட்டது. இந்நாள் முதலே ஆங்கிலர்கள் தங்களது கல்விமுறையை இந்தியாவில் நிரந்தரமாக ஸ்தாபிக்க முயன்றார்கள். இதுவே நாம் எடுத்துக்கொண்ட வியாஸத்துக்கு அங்கமாகிறது.

போர்த்துகேசியர் மதத்தைப் பரவச்செய்வதில் முழுநோக்குடையவர்கள். ஆங்கிலர்களோ வியாபாரத்தையே முதன்மையா

க் கைக்கொண்டவர்கள். எனினும், சிற்சில மதபோதகர்களும் ஆங்கிலர்களிற் கிளம்பினார்கள்; ஆனால் அவர்கட்கு உத்தரவாதமான உதவிகள் தகுதியாக ஏற்படவில்லை; அதனால் அந்தமுறை மெதுவாகவே பெருகிவந்திருக்கிறது. 1612-ம் வருஷத்திற் போர்த்துகேசியரை ஸ்வாலி என்னுமிடத்திற் கடற்சண்டையில் தோற்கடித்த பெஸ்ட் என்னும் தலைவர் ஸூரத் என்னும் துறைமுகத்தில் ஒரு பண்டசாலையை ஏற்படுத்திவிட்டு, அங்கிருந்த ஒரு இந்தியச் சிறுவனைக் கிறிஸ்தவனாக்கி, அந்தக்காலத்து அரசாயிருந்த முதலாவது ஜேம்ஸ் என்பவரது கட்டளையின்பேரில் அந்த இந்தியனுக்கு பீடர் என்னும் தாஸநாமம் சாத்தி, அவனுக்குக் கம்பெனிச் செலவிற் படிப்பும் கற்பித்து அவன்மூலமாக நம்நாட்டாருக்குத் தங்களது மதக்கொள்கைகளைப் போதிக்க ஆரம்பித்தார். ஆனால் அது நிறைவேறாமற் போயிற்று.

1677-ம் வருஷத்தில் ராபர்ட் பாயில் என்பவரால் வேறொரு முறை ஆரம்பிக்கப்பெற்றது. கம்பெனி உத்தியோகஸ்தர்களே பாதிரிமார்களாகக் கற்பிக்கப்பெற்றுச் சிலகாலம் உபதேசமுறை நடந்தேறிவந்தது. இந்தமுறையும்கூட நின்றுபோகும்படி நேர்ந்தது. ஏனெனில், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு செவ்வையாகக் கற்பிக்கப்பட்டு வந்தபோதிலும், அவர்களுக்கே மதக்கொள்கையிற் பிரியம் ஜனித்திராதிருந்ததினால், அவர்கள் உபதேசமுறையிற் கருத்துடன் உழைக்கவில்லை. கடைசி முறையானது கம்பெனி உத்தியோகஸ்தராகிய மிஸ்டர் லீவிஸ் என்பவரால் செண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து ஆரம்பிக்கப்பெற்று 1691-ம் வருஷத்திலிருந்து 1714-ம் வருஷம் வரையிற் செம்மையாக நடைபெற்றது. அந்த லிவிஸ் என்பவர் போர்த்துகேசிய பாஷையின் ஒரு திரிபாகச் சுதேசிகள் பேசிக்கொண்டிருந்த ஒரு பாஷையைக் கற்றுக்கொண்டு நாட்டு ஜனங்கட்குத் தமது மதக் கொள்கைகளைப் போதித்து வந்தார்.

இதன் இடையிற் கம்பெனி உத்தியோகஸ்தர்களே, தங்கள் கீழ் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளவர்களது குழந்தைகளைப் படிப்

பிக்கும் முறையிற் கவனம் செலுத்தினார்கள், இந்த முறையும் சென்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. 1673-ம் வருஷந் தொடங்கி ஸ்காட்லாந்து தேசத்து உபதேசகராகிய பிரிங்கில் என்பவரைக்கொண்டு கம்பெனி உத்யோகஸ்தர்களாகிய போர்த்துகேசிய யூரேஷியர்கட்கும், பிரிட்டிஷ் யூரேஷியர்கட்கும், இந்தியச் சிறுவர்கட்கும் கற்பித்து வந்தார்கள். இந்தப்பாடசாலை நாளுக்குநாள் விருத்தியடைந்து 1692-ம் வருஷத்திற் கம்பெனி அத்யக்ஷர்களாலேயே மேற்பார்வையும் செலுத்தப்படும்படியான நிபந்தனையையும் பெற்றது.

1698-ம் வருஷம், கிறிஸ்தவ அறிவை விருத்திசெய்யும் ஸங்கமென்றுபொருள் கொள்ளும் S. P. C. K. என்னும் கூட்டமானது லண்டன்மாநகரத்திலே ஸ்தாபிக்கப்பெற்றது. அந்தஸங்கத்தார், இந்தியாவிலும் போர்த்துகேசியச்சிறுவர்க்கும் மற்றைச்சிறுவர்க்குமாக ஒரு இலவசப்பாடசாலை ஏற்படுத்தும்விஷயமாக ஒரு ஏற்பாட்டைச்செய்துகொண்டு டேனிஷ் பாதிரிமார்கள் மூலமாக அதனை நிறைவேற்றத் தொடங்கினார்கள். இந்த டேனிஷ்காரர்களும் இதர ஐரோப்பியர்களைப்போலவே வியாபாரநிமித்தம் ஏழாவது நூற்றாண்டில் இந்தியாவிற்குள் வந்தேறினவர்களேயாவர். டென்மார்க்கிலும் இவர்கள் ஈஸ்ட்இந்திய கம்பெனி என்னும் ஒரு கூட்டத்தையாரம்பித்து இந்தியாவில் தொழில்நடத்தி வந்தார்களாயினும், அவர்களது ஆட்டம்அதிகமாக ஓங்கியிருந்ததாகத்தெரியவில்லை. ஆனால் இந்த டேனிஷ் பாதிரிமார்களைக்கொண்டே தரங்கம்பாடியில் முதலில் ப்ராடஸ்டென்ட் கிறிஸ்தவமதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப்பாதிரிச் சங்கத்தாரைக்கொண்டே S. P. C. K. ஸங்கத்தார் தங்களது இலவசப்படிப்பு முறையை இந்தியாவிற் பரவச்செய்ய உத்தேசித்தார்கள். மிஸ்டர் லீவிஸ் என்பவரும் இதே அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டவராகி, டேனிஷ் ஸங்கத்தாரிடம் இதனைப்பற்றிப்பேசினார். அதனையநுசரித்தே டேனிஷ்காரரும் இந்தியாவில் மதவிஷயத்தில் அதிக தீவிரத்துடன் உழைக்க வாரம்பித்தார்கள். இவர்கட்கு S. P. C. K. ஸங்கத்தார் பணவுதவி மிகுதியும் செய்துவந்தார்கள். இந்த

முறை முதலில் தரங்கம்பாடியிலும் பிறகு கடலூரிலுள்ள சென்ட் டேவிட் கோட்டையிலும் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும் முறையே ஆரம்பித்தார்கள். மிஸ்டர் ஸீலிஸ் என்பவர் மிஷன் சங்கத்தைச் சேராதவராகவும் கம்பெனியிலிருந்து சம்பளம் வாங்கிப் பிழைக்கும் ஒருவராகவும் இருந்தமையினால், தமது இலவசப் பள்ளிக்கூடத்தைத் தம்மிஷ்டப்படி நீடித்து நடத்தமுடியாமல் நிறுத்திவிட்டார்.

இச்சமயம் ஆங்கில ஈஸ்ட் இந்திய கம்பெனியின் ஸாதனத்தைப் புதுப்பிக்கும் முறை லண்டனில் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டது. அந்தவாதத்தின் இடையில், இந்தக் கம்பெனியானது இந்தியாவில் மதசம்பந்தமாக உழைத்திருக்கும் விஷயமும் விவாதத்துக்கு வந்தது. அப்போது 'சில காலமே இந்தியாவில் வியாபாரத்தைச் செய்துவந்த டச்சுக்காரர்கள் இலங்கையில் ஒரு காலேஜ் ஸ்தாபித்துக் கிறிஸ்தவக்கொள்கைகளைப் பரவச் செய்திருக்கிறார்கள், ஆங்கில ஈஸ்ட் இந்திய கம்பெனியார் அவ்வளவு நோக்கம் மதவிஷயத்தில் எடுத்துக்கொள்ளவில்லை' யென்று குறைகூறப்பட்டது. அதனால், 'கம்பெனி யுத்தியோகஸ்தர்களும் இந்திய பாஷைகளைக் கற்றுக்கொண்டு தங்கள் கீழுள்ள இந்தியர்களிடம் தாராளமாகப்பேசித் தங்களது மதக்கொள்கைகளைப் பல சமயங்களிலும் அவர்களுக்குச் சொல்லிப்பரவச்செய்யவேண்டும்' என்னும் நிபந்தனையும் ஆங்கில ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் புதியஸாதனத்தில் சேர்க்கப்பட்டது. இந்த நிபந்தனையை இந்தியாவில் நிறைவேற்றும்படியாக மிஸ்டர் ஸ்டீவன்ஸனுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த ஸ்டீவன்ஸன் என்பவர், மிஸ்டர் ஸீலிஸுக்குப் பிறகு இந்தியாவில் ஈஸ்ட் இந்திய கம்பெனியைச் சென்னையில் நடத்திவந்த அத்யக்ஷராவர். இவர் சென்னையில் இரண்டு கல்விச்சாலைகள் ஆரம்பிக்க எத்தனித்தார். ஒரு பாடசாலை, இந்தியாவிலுள்ள ஆங்கிலப் போர்வீரரின் சிறுவர்க்காகவும் மற்றொன்று சுதேசச் சிறுவர்க்காகவும் ஆரம்பிக்கப் பெற்றன. ஆங்கில கலாசாலையில் ஆங்கிலம் பிரதானமாகவும், சுதேச கலாசாலையிற் சுதேச பாஷை பிரதானமாகவும் கொள்ளப் பட்டன. ஆங்கில கலாசாலை

1715-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், செண்ட்மேரி தர்மபாட்சாலை என்னும் நாமங்கொண்டு 18 மாணவர் 12 மாணவியராகிய இவர்களுடன் ஆரம்பிக்கப் பெற்றது. மற்றொன்றாகிய சுதேசியபாடசாலையைப்பற்றிய விவரமொன்றும் சரிவரத் தெரியவில்லை. மூலதனம் மிகுதியும் இல்லாததால், மிஸ்டர் ஸ்டீவன்ஸன் இந்தியச் சிறுவர்களது கல்விமுறையை முற்றவும் டேனிஷ் சங்கத்தார்க்கேஒப்படைத்துவிட்டார். ஆதலால், அந்த டேனிஷ்சங்கத்தாரது முயற்சியாலேயே சென்னையில் வெள்ளைப்பட்டணத்தில் (White town.) ஒரு போர்த்துகேசியப்பள்ளிக்கூடமும், கறுப்புப்பட்டணத்தில் (Black town.) ஒருமலையாளப் பள்ளிக்கூடமும் கடலூரில் ஒருபள்ளிக்கூடமும் ஆரம்பிக்கப்பெற்று, தமிழும் போர்த்துகேசிய பாஷையும் போதிக்கப்பெற்று வந்தன.

டேனிஷ் சங்கத்தார் கல்வி விஷயத்தில் அதிக ஊக்கங்காட்டிப் பதினெட்டாம் நூற்றாண்டெல்லாம் சலிக்காத முயற்சியுடன் உழைத்து வந்தார்கள். அவர்கட்குக் கம்பெனி டைரக்டர்களாற் சிறுஉதவியும் லண்டன் S. P. C. K. சங்கத்தாராற் பேருதவியும் கிடைத்துக் கொண்டு வந்தன. S. P. C. K. சங்கத்தாரும் தாங்கள் தனிமையில், பெரிய ஜர்மன் பாதிரியான ஷிவார்ட்ஸ் என்பவரைத்துணையாகக்கொண்டு, ஒருசங்கத்தை நடத்திவந்தார்கள். இந்தப் பாதிரிதான் முதன்முதலில் திருச்சியிலும் தஞ்சாவூரிலும் பாதிரிப்பாடசாலைகளைத்தாபித்தார். தஞ்சையில் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடமானது ஹைதர்ஆலியின் பணத்தைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தஞ்சையில் அப்போது பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்த மிஸ்டர் ஸல்லிவன் என்பவர் அந்தஜர்மன் பாதிரிக்கு உடந்தையாயிருந்ததுமன்றிக் கல்விவிஷயத்திலும் மிக்க பிரியமுள்ளவரா யிருந்தபடியால் அந்தமுறைதஞ்சையிற் பலனடைந்தது.

இந்த ஸல்லிவன் என்பவர் தாம், கல்விமுறையில் இடீசென்ற ஒருபுதிய மாறுபாட்டை இந்தியாவில் ஆரம்பித்தவர்; இவரது முறை யாவருக்கும் ஒரு படித்தாக ஆங்கிலக்கல்விமுறையை ஸ்தாபிக்க வேண்டுமென்பதேயாம். அப்போதுதான் ஆங்கிலரும் இந்தி

யரும் தாராளமாகச் சம்பாஷணை செய்யமுடியுமென்பது அவரது அபிப்பிராயம். அவரது அபிப்பிராயமே யின்று வரையில் நடந்தேறி வருகிறது. இவரது இந்த அபிப்பிராயத்துக்கு சென்ட்ஜார்ஜ் கோட்டையிலிருந்த கவர்னரும் ஆர்க்காட்டு நவாபும் தஞ்சையரசரும் மற்றச் சுதேசராஜாக்களும் ஒப்பங்கொடுத்தார்கள்; ஆகவே 1785-ம் வருஷத்தில் தஞ்சையிலும் ராமநாதபுரத்திலும் சிவகங்கையிலுமாக மூன்று ஆங்கிலகலாசாலைகள் ஏற்படுத்தப் பெற்றன. ஆனால் இராமநாதபுரம் சிவகெங்கையில் ஸ்தாபிக்கப் பெற்றவைகள் 1790-ம் வருஷத்தில் எக்காரணங்கொண்டோ மூடப்பட்டுப்போய்விட்டன. அதே வருஷத்தில் அந்தஜர்மன் பாதிரி கும்பகோணத்தில் ஒரு ஆங்கில கலாசாலையைத் திறந்து வைத்தார். இதேகாலத்தில் மிஷன் சங்கத்தாரால் சென்னையில் ஒரு ஆங்கிலகலாசாலை யாரம்பஞ்செய்யப்பெற்று, ஐரோப்பியர் யூரேஷியர் இந்தியர் ஆகியயாவர்க்கும் ஒருங்கே ஆங்கிலக்கல்வி முறை போதிக்கப்பெற்று வந்தது.

இவ்வாறே பலவிதமான முயற்சிகளைப் பாதிரிமார்கள் செய்தபோதிலும் யூரேஷிய ஜனத்தொகை அதிகமாகப் பெருகவேயில்லை. 1715-ம் வருஷத்தில் சென்ட்மேரி காலேஜ் ஏற்பட்டு 75 வருஷங்கள் நடந்தும் ஈஸ்ட் இந்திய கம்பெனியார் இந்தக் கலாசாலையிலாவது வேறெந்தக்கலாசாலையிலாவது நேரான கவனத்தைச்செலுத்தாதவர்களாகவே இருந்தார்கள். 1784-ம் வருஷத்தில் சென்ட்ஜார்ஜ் கோட்டைக்குக் கவர்னராக இருந்த லார்ட் காம்பெல் என்பவரது மனைவியான லேடிகாம்பெல் என்பவருக்கு இவ்விஷயத்திற் கவனம் தோன்றி யூரேஷியக் குழந்தைகட்குக் கல்வி கற்பிக்கப் பிரயத்தனப்படத் தொடங்கினர். 1787-ம் வருஷத்தில் அனாதைப் பெண்குழந்தைகட்கென்று ஒரு அனாதை யாச்ரமத்தையும் ஏற்படுத்தினர். உடனே ஒரு ஆண் அனாதையாச்ரமமும் ஏற்படலாயிற்று. இந்த இரண்டு சாலைகட்கும் கம்பெனியாரிடமிருந்து தக்கவுதவியும் கிடைத்துக் கொண்டிருந்தது. ராஜதானிக்கிறிஸ்தவப் புரோகிதராக இருந்த டாக்டர் பெல் என்பவர்

ஆண் அநாதையாசிரமத்துக்கு அத்யக்ஷராக நியமிக்கப் பெற்றார். இவர்க்கு இயற்கையாகவே கல்வி விஷயத்தில் ஒருவிதமான ஆசையும் ஜனித்திருந்தது. ஆகையாற் கல்வியை எங்கும்பரவச் செய்வது எப்படியென்று நன்கு ஆலோசித்து, கிராமங்கள்தோறும் ஒவ்வொரு தர்மபாடசாலையை யேற்படுத்துவதே தக்கவழியாகுமெனத் தீர்மானித்து, பிள்ளைகளுக்கு ஆகாரமேயன்றி உடைமுதலிய வேண்டிய சாதனங்களையும் கொடுத்துப் படிப்பிக்கவும் ஏற்பாடு செய்தார். இந்தமுறையை முதல்முதல் இவர் தமது பாடசாலையிலேயே ஆரம்பித்தார்.

ஆடைமுதலியன மிகவும் ஸாதாரணமாகவும் எல்லார்க்கும் ஒரேவிதமாகவும் அளிக்கப்பெற்றன. மாணவர்களுடைய எவ்விதமான பிழைகளும் ஒருபுத்தகத்தில் எழுதிவைக்கப்பெற்று வாரமொருமுறை பாடசாலைப்பத்யக்ஷர்களால் விசாரிக்கப்பெற்று வந்தன. டாக்டர் பெல் என்பவர் மாணவ உபாத்தியாயரொழுங்கு என்னும் ஒருபுதுமுறையை யாரம்பித்தார். அது நன்றாய் நடந்தேறி இங்கிலாந்திலும் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்தில் இந்தமுறைக்கு டாக்டர் பெல்முறை என்றும் மதராஸ் முறையென்றும் பெயர்வழங்கிவருகிறது. இம்முறையாவது என்னவென்றால், மேல்வகுப்பு மாணவர்களில் தேர்ச்சியுற்றவர்கள் கீழ்வகுப்பு மாணவர்கட்குக் கல்வி போதிப்பதேயாகும். இந்தமுறை நம்மிந்திய நாட்டிற்குப் பழமையாயினும் டாக்டர் பெல் இதனை யொழுங்குபடுத்தியமைத்தார். இம்முறையாற் பாடசாலைக்கு அதிக உபாத்தியாயர்கள் தேவையில்லாமையும் மாணவர்க்கு அறிவுவளர்ச்சியும் உண்டாவதற்குக் காரணமேற்பட்டது. மாணவர்கட்கு, படித்தல் எழுதல் கணிதம் கணக்குவைப்பு அளவுசாஸ்திரம் மாலுமிநூல் கிறிஸ்துமதக் கொள்கைகள் இவைகள் கற்பிக்கப்படலாயின. மாணவர்கள் சாலையைவிட்டு வெளியேறினவுடன் ஏதாமொரு உத்யோகத்தை நிர்வகிக்கும் வண்ணம் பாடசாலையிலேயே சில வியாபார முறைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன. இந்தமுறையானது நாளடைவில் விருத்தியாகிப் பலனளித்து மாணவர்கட்கும் பாடசாலை பதியர்கட்கும் கம்பெனியார்க்கும்பெரும்புகழீட்டித் தந்தது.

டாக்டர் பெல் என்பவருக்குப்பிறகு அந்த உத்தியோகத்துக்கு வந்துசேர்ந்த மிஸ்டர் கேர் என்பவர் அந்தப் பாடசாலையிலேயே

ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப் பிரயத்தனப்பட்டார். கம்பெனியார் இவருடைய முயற்சிக்கு ஊக்கங்கொடுக்காதிருந்தும், இவர் தமது மனந்தளராமலிருந்து தமது சொந்தப்பணத்தைச் செலவு செய்தே அந்தப்பாடசாலையில் ஒரு அச்சியந்திரசாலையை ஸ்தாபித்தனர். இந்த ஏற்பாடு மாணவர்கட்கு ஒரு தொழில் முயற்சியைக் காட்டிக்கொடுத்ததுடன் அந்தப்பாடசாலைக்கு ஒருவித வருவாய்க்கும் வழியாக இருந்தது. இந்த அச்சியந்திரசாலைதான் இப்போது சென்னையில் பிரசித்தியாயிருக்கிற லாரென்ஸ் அஸைலம் பிரிண்டிங் பிரஸ் (The Lawrence Asylum Printing Press) என்பது. இது அரசாங்கத்துக்கு அச்சடித்துக் கொடுத்துவந்தது.

இந்தமுறையே சாதாரணமாக அந்தக்காலங்களில் பள்ளிக்கூட முறையாக அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. உதாரணமாக, புதுச்சேரிக்கு அருகிலுள்ள வீரபட்டணத்தில், பிரஞ்சுப்பாதிரியாகிய M. மாதன் என்பவரால் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அந்த மாணவர்கள் இந்துக்களைப்போலவே சாதாரண உடையுடன் பாடசாலையிலேயே போஷிக்கப்பட்டுவந்தார்கள். ஒவ்வொரு மாணவனும் பள்ளிக்கூடத்தைச் சுற்றியிருக்கும் தோட்டங்கட்குத் தண்ணீர்வார்ப்பது முதலிய காரியங்களில் பழகிவந்ததுடன், வியாபாரம் தையல்வேலை செருப்புத்தைத்தல் தச்சுவேலை ரொட்டிசுடுதல் அச்சுவேலை முதலிய வேலைகளையும் கற்றுக் கொண்டிருந்தான்.

பம்பாயில் தர்மபாடசாலை யென்ற பெயருடைய ஒருபள்ளிக்கூடம் 1719-ம் வருஷத்தில் ரேவரண்ட் ரிச்சார்டு கோப் என்பவரால் ஏற்படுத்தப் பெற்றது. இந்தப்பள்ளிக்கூடமே பிற்காலத்தில் பைகல்லாவில் கல்விச்சங்கத்தார் பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது. 1790-ம் வருஷத்தில் பம்பாயில் போர்த்துகேசிய யூரேஷியக் கலாசாலை யென்பதொன்று ஏற்படுத்தப்பெற்று, இதற்குமுன் நம்மால் குறிப்பிடப்பெற்ற மிஸ்டர் கெர் என்பவரது மேற்பார்வையில் இரண்டுவருஷ காலங்கள் நடந்துவந்தது. இவை தவிர அக்காலங்களில் பம்பாயில் வேறுபாதிரிப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. பம்பாய் ராஜதானியானது சென்னை மாஹாணத்தைப்போல ப்ராடஸ்டாண்ட் கிறிஸ்தவர்களுக்கு அதிகமாக இடங்கொடுக்கவில்லை. ஏனெனில், அங்குள்ள மஹாராஷடிரர்கள் மிகவும் தந்திரமுள்ளவர்கள். ஈஸ்ட் இந்திய

கம்பெனியின் ஆரம்பகாலங்களில் வடக்கிந்தியாவிலுங்கூட பாதிரிமார்களின் முயற்சி பலமடையவில்லை. பதினெட்டாம் நூற்றூண்டுக்கு முன்னர், அக்பரது அரசாட்சிகாலத்தில் பேர்ணியர் என்பவரால் ஆக்ராவில் ஆரம்பிக்கப்பெற்ற ஜெஸூயிட் கலாசாலை யொன்று தான் ஐரோப்பியகல்விச்சாலையாக இருந்தது. 1731-ம் வருஷத்தில் பிரிட்டிஷாருடைய ஆதாவின்பேரில் ஒரு தர்மபாடசாலை திறக்கப்பெற்று S. P. C. K. சங்கத்தாருடைய ஆதீனத்தின் கீழே நடந்துவந்தது. 1756-ம வருஷத்தில் அதிக துரதிர்ஷ்ட வசத்தால் மிகுந்த க்ஷீணதிசைக்குவந்து 1758-ம் வருஷத்தில் மதராஸிலிருந்து இதேகாரியத்துக் கென்றே ராபர்ட்கிளைவ் என்பவரால் அழைத்துக்கொண்டுவரப்பெற்ற கேர்ஞண்டர் என்னும் பாதிரியால் நல்லநிலைமைக்குக் கொண்டுவரப்பெற்றது.

1787-ம் வருஷத்தில் பெண்களும் சிலர் அந்தப்பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பிறகும் அந்தக்கலாசாலைக்கு அழிவு வரும்போலிருந்தது; ஆனால், 1789-ம் வருஷத்தில் கவர்னர் ஜனரலின் தலைமையின் கீழ் ஒரு கிறிஸ்தவக்கூட்டம் கூட்டப்பெற்று அந்தப்பாடசாலையை நடத்துவதற்கென்றே, பங்காளத்துத் தர்மபாடசாலைச்சங்க மென்றதோர் சங்கம் ஏற்படுத்தப்பெற்று, கவர்னர் ஜனரலவர்களே அதற்கு போஷகாாகவும் நியமிக்கப்பெற்றூர். அந்தக் காலத்தில் கல்கத்தாவிலும் மற்ற இடங்களிலும் அநேக இதர பள்ளிக்கூடங்களும் நிலவியிருந்தன. அவற்றுட்சில, உறுதிபெற்ற கல்விமுறையால் நடத்தப்பட்டுவந்தன. மற்றும் சில ஆரம்பித்தவருடைய சிலகாலப்பிழைப்பினிமித்தமே யாரம்பிக்கப்பட்டு நின்றதாகவும் இருந்தன. பெண்பள்ளிகூடங்களும் சில இருந்தன. டிஞ்ஜபூரில் 1794-ம் வருஷத்தில் மிஸ்டர் கேரி என்பவரால் ஒரு பாதிரிப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பெற்றது.

வங்காள ராஜாங்கத்தாரும் கல்வியை யபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்துடனே இரண்டு கல்விச்சாலைகளை ஏற்படுத்தினார்கள். முதலாவது வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்றுப் பெரும்பாலும் அவரது ஆதரவினாலேயே நடைபெற்றுவந்தது. இரண்டாவது அதேவருஷமாகிய 1794-ம் வருஷத்தில் காசியில் ஆரம்பிக்கப்பெற்ற காலேஜாகும். 1784-ம் வருஷத்தில் ஸர்வில்லியம் ஜோன்ஸ் என்பவரால், வங்கா

ளத்து ஆசியச்சங்கமென்ற ஒருசங்கமும் ஏற்படுத்தப்பெற்றது.

*சகோதரர்களே!* 1498-ம் வருஷம் முதற்கொண்டு இதுவரையிலும் நடந்தேறிவந்திருக்கிற ஆங்கிலக் கல்விமுறையால், நமது நாட்டுக்கல்விமுறை அறவே யொழிந்து தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் என்னும் இவை கலக்கத்தையடைந்திருப்பதைத்தான் பலனாகக்கண்டிருக்கிறோம். ஏதோ சிற்சிலருக்குச் சோற்றுக்கும் துணிக்கும்மாத்திரம் சம்பாதித்துக்கொள்ள ஒருவழிகாட்டியாக இருந்ததாயினும் அவரது ஆண்மையை அறவே யொழித்து அடிமைத்தன்மையை ஆபரணமாக்கிக் கொடுத்திருக்கிறது. அவர்களால் நாட்டுக்காயினும் பாஷைக்காயினும் மதத்துக்காயினும் ஆகவேண்டியபலன் ஆகியிருக்கிறதாக எண்ண இடமில்லை. ஏனெனில், இவ்வாங்கிலமுறை நமது நாட்டுமதம் சரித்திரம் பாஷையிவற்றைத் துணையாகக்கொண்டு போதிக்கவில்லை. ஆகையால் நாம் இதுகாறும் பன்னிரண்டுமாதச் சஞ்சிகைகளிலும் வற்புறுத்தியுள்ளபடியாகவோ, அதனையநுசரித்தபடியாகவோ கல்விமுறையானது ஆங்கிலமுறையினின்றும் இந்தியமுறைக்கு மாற்றப்பட்டு மாணவர்கள் செலுத்தப்படுவார்களானால் தேசமும் பாஷையும் மதமும் சீர்குலையாதிருப்பதுடன் விருத்தியம்சத்தையும் நாடும் என்று துணிகிறோம். புத்திமான்களும் அநுபவசாலிகளுமான பெரியோர்கள், தமக்குச் செல்வத்தினாலும் செல்வாக்கினாலும் ஆதிக்யம்பெற்ற இடங்களில், இந்தியக்கல்விமுறையைப் பரவச்செய்ய முயன்றார்களாயின், தேசக்கடமையைச் செய்தவராக ஆவார்கள். ஒருநாடானது தனதுபாஷையையும் மதத்தையும் பற்றுக்கோடாகக் கொள்ளாமல் முன்னேறமுடியாது. தேசம் முன்னேறுவதாவது தேசஜனங்கள் முன்னேற்றமடைவது. தேசஜனங்கள் தமது மதம் பாஷை யிவற்றையறியாதவரையில் தேசசரித்திரங்கள் கவனிக்கப்பெறாமல் கழியும். அவை கழியவே பூர்வமன்னருடைய ராஜ்யதந்திரம் வீரம் ஒழுக்கங்களும் பூர்விகப் பெரியோரது ஆசார அநுஷ்டானங்களும் நம்மவரது மனதில் பதியா. இந்தப் பதியாத்தன்மைதான் ஒருதேசத்தை க்ஷீணிக்கச் செய்கிறது. ஆதலால் தேசமுன்னேற்றத்தைக் கோருகிற பெரியோர்கள் தேசக்கல்விமுறையை மிகுதியும் கவனித்துநடத்தல் கடமையாகுமென்று பின்னும் வற்புறுத்துகிறோம். பத்திராதிபர்.

# சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

## சொக்கலிங்கம்புத்தூர்

## மணிவாசக மாணவர்சங்கம்.

இச்சங்கத்தின் கார்த்திகை மாதக்கூட்டம் பிங்கள ௵ கார்த்திகை ௴ ௰௨௳ செவ்வாய்க்கிழமைகாலை 9-மணிக்குக் கோகர் கற்பகவிநாயக கலாசாலைத் தலைமை ஆசிரியர் பிரம்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. அன்னான்று அருமையான உபந்நியாசங்கள் 3 நடைபெற்றன.

மார்கழி மாதக்கூட்டம் மார்கழி ௴ ௰௬௳ வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பிரம்மஸ்ரீ வித்வான் ரெ. ராமமூர்த்தி ஐயரவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கூடிற்று. அன்னான்று ஸ்ரீ மாணிக்க வாசகவித்தியாசாலையின் மாணவர்களால் (8) எட்டு உபந்நியாசங்கள் நடைபெற்றன. இந்நகர் பிரம்மஸ்ரீ ச. இராமையங்கார் புல்லாங்குழலால் சபையோரை மகிழ்வித்தார். ஆத்தங்குடி ஜோசியம் ஐயங்காரவர்கள் இன்னிசைப்பாக்களை ஓதி இன்புறுவித்தார்கள். கடவுள்வாழ்த்தும் வந்தனோபசாரமும்கூற, சபை மங்களகரமாக நிறைவேறியது.

மணிவாசகன்

## 10-12-1917-ல் நடந்த ஆதனக்கோட்டை உபாத்தியாயர்சங்கத்தின் ஏழாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்.

சங்கத்தின் மெம்பர்கள் 21 பேர்களுக்கு 19 பேர்கள் ஆஜராயிருந்தார்கள்.

(1) சவகம் காலை 9-மணிக்கு ஆரம்பம் செய்யப்பட்டு ஸ்கூல் மாணாக்கர்களால் தெய்வவணக்கம் தியானம் செய்யப்பட்டு கடவுள் ஸ்தோத்திரப்பாடல்கள் சுருதிலயத்துடன் பாடப்பட்டு ஒழுங்காய் அவரவர்கள் ஸ்தானங்களில் அமர்த்தப்பட்டார்கள்.

(2) அக்காலத்தில் இவ்விழாவுக்கென்று பலவித அலங்காரத்துடன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் ஸ்ரீவித்யாரூபிணியாகிய ஸரஸ்வதிபடத்தின் ஸந்நிதானத்தில் அமையப்பெற்ற ஆஸனங்களில் விஜயம் செய்த ஷ்ட்கார்த்த கனவான்களில் காம்பக்குடி ரேஞ்சுஸ்கூல்டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ா-ஸ்ரீ சேஷய்யர் அவர்கள் ஆலங்குடி, பிரிட்டிஷ ரிடையர்டு தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ K. S. ராமச்சந்திரய்யர் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரேபணை செய்ய அண்டக்குளம் ஸ்டேட்ஸ்கூல் ஹெட்மேச்சர் B. L. வெங்கிடராமையர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு மற்ற மெம்பர்களுடைய கரகோஷங்களுடன் அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

(3) உடனே அய்யர் அவர்கள் முகவுரையாகச்சிலவார்த்தைகள் சொல்லியபின்னர், கடவுள் வணக்கம் ஆதனக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் 2-வது உதவி உபாத்தியாயர் சுப்பிரமணியபிள்ளையவர்களால் சுருக்கமாகப்பாடப் பட்டது. பிறகு இச்சங்கத்தின் செக்ரடரி A. S. பஞ்சாபகேசசாஸ்திரியால் சென்ற 1916ளு டிசம்பர்மீ முதல் 1917 டிசம்பர்மீ வரையில் இச்சங்கம் செய்திருக்கும் வேலையைப்பற்றிச் சுருக்கமான ரிபோர்ட்டும் வரவு செலவு கணக்குகளும் படித்துக் காட்டப்பட்டன.

(4) ஆதனக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் 4வது வகுப்புப் பிள்ளைகளுள் R. மாரிமுத்து என்பவனால் பாலர் வகுப்புக்கு "இடம் (Spaw work) கணக்கு" கோணம் என்பதிலிருந்து ஆரம்பித்து முக்கோணம், சாற்கோணம் என்பவைகளைப் பலவஸ்துகளைக்கொண்டு காட்டி மாதிரிப்பாடமாகப்போதிக்கப்பட்டது. பிறகு அதேவகுப்பு G நடேசன் என்பவனால்அதே வகுப்புக்கு "நிறங்கள்" என்னும் பாடமானது பலவிதமான நிறங்களைத் தண்ணீரில் கரைத்தும் கலத்தும் காட்டி முக்கியமான நிறங்களையும் கலப்பு நிறங்களையும் வித்யாசப்படுத்திககாட்டி மாதிரிப்பாடமாக போதிககப் பட்டது.

(5) இந்தநிறசம்பந்தமானபாடத்தை யநுசரித்து அக்கிராசனாதிபதியவர்கள் தங்களுடன் கொணர்ந்த சிலபடங்களைக்காட்டி மனிதர்களுடைய எண்ணங்களுக்கும்ரூபங்கள் நிறங்கள் உண்டென்றும் இன்னின்னகுணங்களை யடையும்போது இன்னின்ன ரூபங்கள் நிறங்களையடைகிறதென்றும் உலகத்தின் கண்ணுள்ள ஜீவவர்க்கம் மூலவர்க்கம் தாதுவர்க்கம் எல்லாவற்றிற்கும் உயிர்உண்டு என்பது நம்இந்தியாதேசத்தில் வங்காளத்து மகானாகிய J, C Bose என்பவரால் மின்சாரசக்தியைக்கொண்டு எடுத்துக்காட்டப்படுகிறதென்றும் அது ஸம்பந்தமான அரிய பெரிய விஷயங்களையும் கேட்போர் பார்ப்போர் மனதைக் கவரும்படி உருக்கமாய் எடுத்துச் சொன்னார்கள்.

(6) பிறகு நான்காவது வகுப்பு M. ராமையா என்பவனால் ஐம்புலன்களில் சுவைஎன்னும்விஷயத்தைப்பறறி பாலர்வகுப்புக்குப் பலவிதசரக்குகளைச் சுவைக்கச்செய்து அறுசுவைகளையும்வித்யாசப்படுத்திக்காட்டி மாதிரிப்பாடமாக போதிக்கப் பட்டது. உடனே மணி 12 ஆகியபடியால் எல்லோரும் உண்டியருந்தவேண்டியகாலமாகியதென்று அக்கிராசனாதிபதியவர்கள் சந்தோஷமாக எல்லோருக்கும் உத்தரவளித்து மறுபடி 2 மணிக்குவந்துகூடும்படி கேட்டுக் கொண்டார்கள்.

(7) மாலை 2மணிக்கு ஸ்கூல் சூப்பரின்டெண்டெண்ட் மகா-ள-ள-ஸ்ரீ B. V. சககாரமேசுவர அய்யர் அவர்கள் விஜயம் செய்ய அக்கிராசனாதிபதியவர்களால் சுவாமிகளுடைய ஸந்தோஷமான கரகோஷங்களுடன்மறுபடியும்

அக்கிராசனம் வகிக்கப்பட்ட, இவ்வூர் ரினையர்டு ஸால்டு இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ K. S. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் இச்சமஸ்தானம் மைனர் இர்ரிகேஷன ஸூபர்வைசர் மகா-ள-ள-ஸ்ரீ T. G. ராமசந்திரய்யர் அவர்கள் ஆலங்குடிதாலூகா மைனர் இரிகேஷன் ஓவர்சீயர் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் இவ்வூர் போலீஸ் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸர் ஸ்ரீ ரெங்கசாமிநாயுடு அவர்கள் இவ்வூர்கிராம உத்தியோகஸ்தர்கள் மகாஜனங்கள் மிராசுதார்கள் குடிகள எல்லோரும் அவரவர்கட்கு ஏற்பட்ட இடங்களில் அமர்ந்தபின்னர், நான்காவது வகுப்பு மாணாக்கனாகிய K. முத்தய்யனால் பாலர் வகுப்புகளுக்குப்படத்தைப்பார்த்துக் கதைசொல்லுதல் என்பதற்கு "காக்கையும் நரியும்" என்னும் பாடத்தைக் கரும்பலகையில் நான்குபிரிவுகளாகத் தானே சித்திரப்படங்கள போட்டுக்காட்டி மாதிரிப்பாடமாகப் போதிக்கப்பட்டது.

(8) அதேகதை 3வது வகுப்புச் சிறுமி B. பாலாம்பாள் என்பவளால் அபிநயப்பாட்டுடன்பாலர்வகுப்புகளுக்குப்போதிக்கும் முறையை மாதிரிப்பாடமாக போதித்துக் காட்டப்பட்டபிறகு ஷை வகுப்பு S மதுராம்பாள் என்னும்சிறுமியால் அதேபாலர்வகுப்புக்கு; கதைசொல்லுதல் எப்படி என்பதைப்பற்றி மாதிரிப்பாடமாக "வேப்பமரமும் நாணலும்" என்னும் கதை "தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்" என்னும் நீதிக்கிணங்கப்போதித்துக் காட்டப்பட்டதன் மேல், ஸ்ரீ ஸ்கூல்சூப்பரின்டெண்டெண்டவர்களால் குழந்தைகளுக்குக் கதை சொல்வதில, பெரியவர்களுக்கு ஸமஞ்சஸமில்லாதிருந்தாலும் அதை ஸமஞ்சஸப்படுத்திக குழந்தைகளுக்குப் புகட்டும்படி உபாத்தியாயர்களாகிய மெம்பர்களுக்குப் பலதிருஷ்டாந்தங்களுடன் கூறப்பட்டது.

(9) 2வது வகுப்பு N. நாராயணசாமிஎன்பவன் பாலர்வகுப்புக்குப் பாட்டுடன் தேஹாப்பியாஸம் [Drill) செய்தலைப் பாடிக்காட்டி அப்படியே பிள்ளைகளைச் செய்யும்படி டிரில் நடத்திய பிறகு மகா-ள-ள-ஸ்ரீ சூப்பரின்டெண்டெண்டவர்கள் அதேபையனை மூச்சு அப்பியாஸம் (Breathing Exercise) நடத்தும்படிசொல்ல அவனால் அந்தஅப்யாஸங்களும அவர்களுக்கு நடத்திக்காட்டப்பட்டது. பிறகு பிள்ளைகள் ஸால்யூட் செய்துபோனபிறகு பெண்குழந்தைகளால் கும்மிகோலாட்டம் முதலியவை போட்டுக்காட்டப்பட்டன.

(10) ஆலங்குடி கோவாபரேடிவ பாங்கில் புதுகோட்டை டவுன் பாங்கிகாரியதரிசி மகா-ள-ள-ஸ்ரீ G. சுந்தரேசய்யர் அவர்களால "ஒருஊரல்கோவாபரேடிவ் கிரெடிட்ஸொஸைட்டி பஞ்சாயதுக்கு மீட்டிங்கில் நடக்கும்மாதிரியைக்காட்டி" எழுதப்பட்டு ஸொஸைட்டிகளுக்கு அனுப்பப்பட்ட புஸ்தகத்தினுள்ளபடி இவ்வூர் ஸ்டேட்ஸ்கூல் 4வது 3வது வகுப்பு பிள்ளைகளால் சம்பாஷணை செய்யப்பட்டு விஷயம் அக்கிராசனாதிபதியவர்களுக்கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் அதிகஆனந்தத்தைவிளைவிக்க ஸ்ரீ சூப்பரின்டெண்டெண்டவர்களால் ஷை பையன்களுக்கு நீதித்தொகுதி யென்னும் புஸ்தகங்கள் பரிசளிக்கப்பட்டன.

(11) சங்கத்தின் செக்ரடரியால் "கல்வியறிவின்பயன்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யாஸம் செய்யப்பட்டு காளிதாஸன் என்னும் மகாகவி தன்னை வந்தடைந்த ஒன்றுமறியாத ஏழைப்பிராமணனைச் செல்வவந்தனாகச் செய்ததை கூறப்பட்ட பிறகு அதேவிஷயத்தை யனுசரித்து அண்டக்குளம் ஸ்டேட்ஸ்கூல் B. L. வெங்கிடராமையர் அவர்களால கேட்போர் மனமுவக்க உபந்யாஸம் செய்யப்பட்டது.

(12) அக்கிராசனாதிபதியவர்களின் முடிவுரை சுருக்கமாயினும் அநேக விஷயங்களை அடக்கிவைத்திருக்கும் சிறு வாக்கியங்களாக விஷயங்களை எடுத்துச் சொல்லப்பட்டுக் கேட்போர் மனதை உருகும்படி செய்து, ஐயாவர்கள் சொல்லியபடியே செய்யவேணுமென்னும் ஊக்கத்தை மெம்பர்களுக்கும் மற்று முள்ளவர்களுக்கும் உண்டுபண்ணியதென்பதை மறுக்கமுடியாது.

(13) பிறகு சுப்பிரமணியபிள்ளையவர்களாலும் மாத்தாங்குடி டீச்சர் ராமசாமி வெட்டுவான் அவர்களாலும் ஹார்மோனியம் சுருதியுடன் தெய்வவணக்கப்பாட்டுகள் பாடப்பெற்றக்குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்சுப்பாலுள்ள வெளியில் பலவிதவிளையாட்டுகள் (Sports) விளையாடிய பின்னர் சுமார் 5 மணிக்கு அவர்களைக்கொணர்ந்து ஒழுங்காய் நிறுத்தப்பட்டு H. M. சக்ரவர்த்தியாரவர்கள் H. H. மகாராஜா அவர்கள் வாழ்த்துப் பாட்டுகள் மங்களப்பாட்டுகளுடன் வந்திருந்தவர்களெல்லோருக்கும் சந்தன தாம்பூலாதிகள் வழங்கிய பிறகு சேர்மன் அவர்களுக்கும் மற்றும் சபையிலமர்ந்திருந்த கனவான்களுக்கும் வந்தனங்களளிக்கப்பட்டு சந்தோஷங்களுடன் சபை கலைந்தது.

சுபம்.

ஆதனக்கோட்டை 10—12—17 } *A. S. Panchapagesa Sasthri.*
*Secretary.*

உ

# தேவகோட்டை.

## ஞானசம்பந்தநற்சபை.

---

இதன் மாதாந்தரக் கூட்டம் சிகழும் பிங்கள ௵ மார்கழி ௴ ௩௨ (17—12—17) திங்கட்கிழமை பிற்பகல் 4½ மணிக்குச் சொக்கலிங்கம்புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்தி ஐயாவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. கடவுள்வாழ்த்துக்கூறப்பெற்றவுடன்,—

(1) பலவான்குடி சி வி. வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வீ. குமாரவீரையாவர்கள் "சைவ விலக்கேல்" என்னும் விஷயத்தை யிகவும் விரிவாகவும் அழகாகவும் உபந்யசித்தார்கள்.

(2) காரைக்குடி கம்பராமாயணப்பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜையங்காரவர்கள் கம்பராமாயணம் கடவுள் வணக்கம் உலகம் யாவையும் என்ற பாட்டிலுள்ள தத்வார்த்தங்களை வடமொழி தென்மொழி மேற்கோள் கொண்டு விளக்கிப்பரக்க வுபந்யசித்தார்கள்.

பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் மேற்படி உபந்யாசங்களிலுள்ள விசேஷங்களை விளக்கிவிரிவாக அபிப்பிராயங் கூறினார்கள். யாவருக்கும் வந்தனோபசாரஞ்செய்யப் பெற்று மங்களவாழ்த்து சிகழ இரவு 8½ மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று. சி வி. கலாசாலையில் வாசித்த காரைக்குடி அரு. ராம. திருநாவுக்கரசு, சபை கலாசாலை முதலியவற்றை வாழ்த்தி ஒருவாழ்த்துப்பாக் கூறினான்,

சம்பந்தன்,

உ

# சுலக்ஷணை.

(424-ம் பக்கத் தொடர்ச்சி)

காளியாயி, "ஹோட்டலில் இந்த உடையோடு இரவில் தங்கி, காலையில் மாறுவேஷம் போட்டுக்கொண்டால், ஹோட்டலில் உன்னைப் பார்த்தவர்கள் உன்னுடைய மாறுவேஷத்தைக் கண்டுகொள்வார்கள்."

மதிமான், "ஆம், அது சரிதான். நேற்றுத் தீர்மானித்தபடி நான் இங்கேயே இரவைக் கழிக்கிறேன்."

மதிமான் சாராயம் இருக்கிறதா என்று கேட்க, அவள் அன்று புதிதாய்க் கடையில் வாங்கிவந்த இரண்டுபோத்தல் (**Bottle**)களைக் கொடுத்தாள். இரண்டு போத்தல் சாராயத்தையும் அவன் குடித்தபிறகு, படுக்கைக்குப்போகவேண்டுமென்றான்.

"காளியாயி இதுவரையும் நீ யாரென்றும், உன் பெயர் இன்னதென்றும் எனக்குத் தெரிவிக்கவில்லையே."

மதிமான், "நான்யாரென்பதைநீ அறிந்துகொள்வதனாற் பாதகமில்லை. நீ அதை ஒருவரிடமும் வெளியிடமாட்டாய் என்று எனக்குத் தெரியும். நான் புவனாலயம் ஜமீந்தார். என் பெயர் மதிமான்"

காளியாயி, "அவளுடைய தாதிக்கு முதலில் ஏதாவது முன்பணம் கொடுக்க வேண்டும்."

மதிமான் மடியிலிருந்து ஒருபணப்பையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "இந்தப் பத்துரூபாய் நோட்டைஅவளிடம் கொடு—வேண்டாம்—நோட்டு வேண்டாம். ரூபாயாகவே கொடுத்துவிடு," என்று சொல்லி, முதலில எடுத்த நோட்டைப் பைக்குள் வைத்துவிட்டு, சலசலவென்று சப்திக்கும்படி பத்து ரூபாயை எடுத்து எண்ணி அவளிடம் கொடுத்தான்.

"நாளை அதிகாலையில் தாதியினிடம் இந்தரூபாயைக்கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லி, காளியாயி மதிமானை மேல்வீட்டிலிருந்த அறையொன்றிற் கொண்டுபோய்விட்டு, அங்கு நித்திரை செய்யச்சொன்னாள். அவ்வறையின் ஒரு பக்கத்திற் கனதியாக வைக்கோல் பரப்பப்பட்டு, அதன்மேல் ஒருபாய் விரிக்கப்பட்டிருந்தது. பாயும், தலையணைகளும், போர்வையும் புதியனவாயிருந்தன. மதிமான் தன்னுடைய மாளிகையிலிருக்கும் படுக்கையறையையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, அவனுக்கு இந்த அறையில் நித்திரை செய்வது மிகவும் கஷ்டமாகத் தோன்றிற்று. ஆயினும் பாலாமணியை அடைவதற்குச் சிறிது கஷ்டப்படத்தான்வேண்டுமென்று எண்ணிக்கொண்டு அந்தப் பாயிற் படுத்து அயர்ந்து நித்திரைசெய்தான்.

நடுச்சாமவேளையிற் காளியாயி வீட்டைவிட்டுப் புறப்பட்டு மெதுவாய் வெளியே சென்றாள். கொஞ்சதூரம் சென்றதும் ஒரு மனிதன் புதர்களிலிருந்து வெளியே வந்து அவளெதிரே நின்றான்.

"என்ன காளி, எல்லாம் சரியாயிருக்கிறதா?" என்று அங்கே தோன்றினவனாகிய வீரசிங்கம் கேட்டான்.

காளி, "ஆம், எல்லாம் சரியாயிருக்கிறது. இப்பொழுது தான் மேலேபோய் மெதுவாய்ப் பார்த்துவிட்டு வந்தேன். அவன் குறட்டை விட்டுத் தூங்குகிறான்."

வீரசிங்கம், "சிரமத்திற்குத் தகுந்த லாபம் கிடைக்குமா?"

காளி, "உன் பங்கிற்குக் குறைந்தது இருநூறு ரூபாய் கிடைக்கும்."

வீரசிங்கம், "நிச்சயம் கிடைக்குமா?"

காளி, ". அவன் அணிந்திருக்கும் நகைகளைப் பேயாண்டி நூறு ரூபாய்க்கு வாங்கிக்கொள்ளுவான். கடையில் விற்றால் மூந்நூறு ரூபாய்க்கு விற்கலாம். ஒருகடியாரமும் தங்கச்சங்கிலியும்

வயிர மோதிரங்களும் இருக்கின்றன. அவனுடைய பணப்பையைப் பார்த்தேன். ஒரு பக்கத்தில் நோட்டுக்களும் மற்றொரு பக்கத்தில் ரூபாய்களும் இருக்கின்றன. அதில், குறைந்தது மூன்றூறு ரூபாயிருக்கும்."

வீரசிங்கம், "சிரமத்திற்குத் தகுந்த கூலி கிடைக்கும்போலிருக்கிறது. என்னிடத்திற் கைத்துப்பாக்கியும் கத்தியும் இருக்கின்றன. புதைகுழி தோண்டுவதற்கு மண்வெட்டி இருக்கிறதா?"

காளி, "நான் அதைமறந்துவிடவில்லை. அது குடிசையிலிருக்கிறது. இன்றைக்கு மற்றைய சாமான்களை வாங்கிக்கொண்டு வந்தபோது அதையும் வாங்கிவந்தேன். கனமாய் வைக்கோல் பரப்பி அதன்மேல் அவனுக்குப் படுக்கை போட்டிருக்கிறேன்"

வீரசிங்கம், "எனக்கு விளங்குகிறது. இரத்தக்கறை தரையிற் படாதபடி வைக்கோலைப்பரப்பினுய்போலும், ஆனால் அவன்யார்?"

காளி, "அவன் ஜமீந்தாராயிருந்தால் மாட்டேனென்பாயோ?"

வீரசிங்கம், "ஜமீந்தாராயிருந்தால் எனக்கென்ன?"

காளி, "அப்படியானுற் சொல்லுகிறேன். அவன் புவனுலயம் ஜமீந்தார்."

"புவனுலயம் ஜமீந்தாரா?" என்று அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

காளி, "ஆம், புவனுலயம் ஜமீந்தார்தான். நீ ஏன் புவனுலயம் ஜமீந்தார் என்றதும் அவ்வளவு ஆச்சர்யப்பட்டாய்?"

வீரசிங்கம், "நான் புவனுலயம் ஜமீந்தார் குடும்பத்திற் சில காரியம் செய்திருக்கிறேன். துஷிதன் என்பவன் என்னை அமர்த்தினுன். அது நடந்து இப்பொழுது பத்தொன்பது இருபதுவருஷங்களாகின்றன."

பிறகு இருவரும் குடிசைக்குள் நுழைந்தார்கள். நுழைந்தவுடன் காளியாயி ஓசைப்படாமற் கதவைச் சாத்தினுள். உள்ளே ஆகாரங்களும் சாராயமும் இருந்தன. உடனே வீரசிங்கம் உட்கார்ந்து வயிறு நிறையச்சாப்பிட்டு, சாராயத்தைக் குடித்தான்.

காளி, 'நேரமாகிவிட்டது. இனிமேல் தாமதிக்கக்கூடாது. பொழுது விடிவதற்குள், பிணத்தை மறைத்துவிடவேண்டும்' என்று சொல்லிவிட்டுக் கையில் ஒரு ஈட்டியை எடுத்துக்கொண்டாள்.

காளியாயி. இடது கையில் எரிகிற மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டும், வலதுகையில் ஈட்டியைப் பிடித்துக்கொண்டும், மெதுவாய் அறையைவிட்டு வெளியேவந்து படிகளில் ஏறினாள். அவள் பின்னால் வீரசிங்கம் சென்றான். இருவரும் சற்றுநேரம் மதிமான் தூங்கும் அறைக்கதவருகில் நின்று கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். குறட்டைவிடும் சப்தத்தைத் தவிர வேறொரு சப்தமும் கேட்கவில்லை. ஆகையால் அவன் அயர்ந்து நித்திரைசெய்வதாய் அவர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள். காளியாயி மெதுவாய்க் கதவைத் திறக்கவும் இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அவள் கையில் வைத்திருந்த மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தால், மதிமான் அயர்ந்து தூங்குவது அவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் தங்களுடைய கொலைத்தொழிலை ஆரம்பிக்கப்போகும் சமயத்தில் காளியாயி உரத்த சப்தமாய்க் கூச்சலிட்டாள். அந்தக் கூச்சல் ஆச்சரியத்தினாலும் பயங்கரத்தினாலும் உண்டானதுபோலிருந்தது. திடீரென்று உண்டான மனக்குழப்பத்தினால், அவள் மெழுகுவர்த்தியைக் கீழேபோட்டுவிட, அது அணைந்துபோய் அறை முழுவதும் இருள் நிறைந்தது.

அவள் போட்ட கூச்சலினாலும், மெழுகுவர்த்தி விழுந்த சப்தத்தினாலும் மதிமான் விழித்துக்கொண்டு, "திருடர்கள்! திருடர்கள்! கொலை! கொலை!" என்று கத்தினான்.

காளியாயி உடனே மனக்குழப்பம் நீங்கி வீரசிங்கத்தின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு 'இந்த அறையை விட்டு வெளியேபோ' என்று இரகசியமாய்ச் சொன்னாள். வீரசிங்கம் நடந்தகாரியங்களால் ஆச்சரியத்தை அடைந்தான். என்னசெய்கிறதென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனாற் காளியாயி சொன்னதற்கு ஏதாவது தகுந்த காரணமிருக்கவேண்டுமென்று நினைத்து அவன் சொன்னபடி அறையை விட்டு வெளியே போனான். அவன்

போனதும் காளியாயி படீசென்று கதவைச் சாத்தினாள். பிறகு கத்திக்கொண்டிருந்த மதிமானிடத்திற்கு விரைந்து வந்து, "கத்தாதே, ஒன்றுமில்லை" என்று சொன்னாள்.

மதிமான், "ஏதோ சப்தம் கேட்டதே அது என்ன? என்னை ஒன்றும் செய்யாதே. என்னுடைய பணப்பையை வேண்டுமானால் எடுத்துக்கொள். ஆனால்-ஆனால்-" என்று சரீரமெல்லாம் நடுங்கிக்கொண்டு, சொல்லி முடிப்பதற்குள், காளியாயி சொல்லுகிறாள், "நீ பயப்படவேண்டியதில்லை. நான் உனக்குத்தீங்குசெய்யமாட்டேன். எனக்கு உன்னுடைய பணப்பை வேண்டாம்."

"ஆனால் என்னநடந்தது? நீ இங்கு என்ன செய்கிறாயென்று சொல், அந்தச்சப்தம் கேட்டதே, அது என்ன? உன்கையில் ஏதோ பிரகாசித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேனல்லவா?" என்று மதிமான் இன்னும் நடுங்கிக்கொண்டே சொன்னான்.

காளியாயி ஈட்டியை மறைத்துவிட்டுச் சொல்லுகிறாள், "இல்லை அது ஒன்றுமில்லை. நான் மெழுகுவர்த்தியைக் கீழேபோட்டுவிட்டேன். யாரோ ஒருகுடிகாரன் வீட்டிற்குள் நுழைந்தான். இந்த வீட்டிலிருந்து நீ உடனே வெளியே போகவேண்டும். என்னை ஒன்றும் கேட்கக்கூடாது. தாமதிக்காமல் நான் சொல்லுகிறபடி செய். நான் வெளியேபோய்விட்டுச் சிலநிமிஷங்களுக்குள் திரும்புவேன். அதற்குள் நீ இந்தவீட்டை விட்டுப்போகத் தயாராயிருக்க வேண்டும்."

அவள் உடனே கீழே இறங்கி வீரசிங்கத்தினிடம் போனாள். அவன், அவள் திடீசென்று கூச்சலிட்டதற்கும் கொலையை நிறுத்தினதற்கும் காரணம் தெரிந்து கொள்ள, ஆவலாயிருந்தான். காளியாயி விளக்கை ஏற்றிவிட்டு உறுதியான குரலுடன் சொல்லுகிறாள், "நீஇங்கேயே உட்கார்ந்திரு. நடந்தவைகளைப்பற்றி உனக்கு விளங்கச் சொல்லுகிறேன். ஆனால் இப்பொழுது சொல்லமுடியாது. அவன் வீட்டைவிட்டுப் பத்திரமாய் வெளியே போனபிற்பாடுதான் சொல்லுவேன்.—"

வீரசிங்கம், "என்ன! அவன் நம்மை விட்டுத் தப்பிபோட வேண்டுமென்கிறாயா?"

காளி, "ஆம், என்னை உனக்கு நன்றாய்த் தெரியும். நான் செய்வனவெல்லாம் கெடுதலாயிருக்க மாட்டாவென்பதும் உனக்குத் தெரியும்."

வீரசிங்கம், "ஒருவேளை நீ செய்கிறது நன்மைக்காக இருக்கலாம். ஆனால் அது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது."

காளி, "இருந்தபோதிலும் அதுதான் என்னிஷ்டம். நான் நாலைந்து நிமிஷங்களில் திரும்பி வருவேன். அதுவரை சாராயத்தைக் குடித்துக்கொண்டிரு," என்று சொல்லிவிட்டு விளக்கை எடுத்துக்கொண்டு மதிமானிடத்திற்குச் சென்றாள். அவன் வெளியே போவதற்குத் தயாராயிருந்தான். காளியாயி சற்றுநேரம் அவனைக் கவனமாய்ப் பார்த்தாள்.

காளி, "இங்கே நடந்த விஷயங்கள் உனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம். அவைகளைப்பற்றி ஒருவார்த்தைகூட நான் உனக்குச் சொல்லமாட்டேன். ஆனால் ஒரு விஷயம் சொல்லுகிறேன். 255 நி-ர் வீட்டிலிருப்பவனைப்பற்றியும் அவன் ஜாதியைப் பற்றியும் நான் சொன்னதெல்லாம் முழுப்பொய்."

மதிமான், "இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது."

காளி "இன்னும் ஒருமணிநேரம் 'நின்றாலும்' இவைகளைப் பற்றி ஒருவார்த்தைகூட நான் உனக்குச் சொல்லப்போகிறதில்லை. ஆகையால் உடனே வெளியேபோ."

மதிமான், இனிமேல் நிற்பதிற் பிரயோஜனமில்லை என்று காளியாயியின்பின் சென்றான். அவள் குடிசையின் கதவைத்திறக்க மதிமான் வெளியே போனான். கதவைச் சாத்திவிட்டு அவள் வீரசிங்கத்தினிடம் போனாள். காளியாயியையும் வீரசிங்கத்தையும் குடிசையில் விட்டுவிட்டு, நாம் மதிமானுடன் போவோம்.

அவன் வெளியேறினதும், தன்னுடைய மாளிகைக்குப் போகலாம் என்று யோஜித்தான். இரவு மணி ஒன்றானபடியால் வாடகை வண்டி கிடைக்கவில்லை. மெதுவாய் நடந்து போய்க்கொண்டிருந்தான். 255 நெ-ர் வீட்டருகிற் சென்றதும் சற்றுத் தாமதித்தான் அந்தவீட்டின்கதவு திறக்கப்பட்டு, ஒருஸ்திரீ வெளியே வந்தாள். அவள் வேலைக்காரியைப்போலிருந்தாள்.

மதிமான். " இந்நேரத்தில் உனக்கு வெளியில் என்ன வேலை? "

ஸ்திரீ, ' நடுச்சாமவேளையில் இங்கு நீ என்ன செய்கிறாய்? நீ, யார்? இந்நேரத்தில் உன்னை இங்குக் கண்டதும் நான் பயந்து போனேனே.'

மதிமான், " நான் புவனாலயம் ஜமீந்தார். இங்கு ஒரு காரியமாய் வந்தேன். இந்தப் பத்துரூபாய் நோட்டை வைத்துக்கொள், " என்றுசொல்லி நோட்டைக்கொடுத்தான். அவள் அதைச் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு, என்னகாரியமென்று கேட்டாள். மதிமான், " உன் எஜமானி எப்படிப்பட்டவள்? நான் அவளை நாடகக் கொட்டகையிற் கண்டேன். மிகவும் ஆசைகொண்டேன். அவள் எனக்கு இசைவாளா? நான் ஏராளமான ஆஸ்தியை உடையவன். "

ஸ்திரீ, ' என்னுடைய எஜமானி இன்னும் சற்றுநேரத்தில் நாடகத்திலிருந்து வருவாள். அதற்காகத்தான் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதுவரையும் தாங்கள் கொஞ்சதூரத்துக் கப்பாற் போயிருக்கவேண்டும். எஜமானி வந்ததும் கேட்டுச்சொல்லுகிறேன்.'

அப்படியே மதிமான் கொஞ்சதூரத்திற் போயிருந்தான். பாலாமணியும் சற்றுநேரத்தில் வந்தாள். வேலைக்காரி நாலைந்து நிமிஷம்வரை அவளுடன் பேசிக்கொண்டிருந்தாள். பாலாமணி உள்ளேபோனபிற்பாடு, மதிமான் வேலைக்காரியினிடம்போய், என்ன சமாசாரம் என்று ஆவலாய்க் கேட்டான். அவன் அவனை உள்ளே

அழைத்துக்கொண்டுபோய் ஒரு அறையில் உட்கார வைத்தாள். சில நிமிஷங்களானதும் பாலாமணியும் அந்த அறைக்கு வந்தாள்.—

## பத்தொன்பது வருஷங்களுக்கு முன்.

காளியாயியும் வீரசிங்கமும் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். காளியாயி தன் நடத்தையின் காரணத்தை வீரசிங்கத்திற்குத்தெரிவிப்பதில்லை என்று தீர்மானித்துக்கொண்டாள். ஆகையால் அவனுக்கு ஏதாவது சமாதானம்சொல்லி அவனிடத்திலிருந்து சில விஷயங்களை அறியவிரும்பினாள்.

காளி, 'சாராயம் நன்றாயிருக்கிறதா ?'

வீரசிங்கம், 'இந்தச் சாராயத்திற்காகவா நான்இங்குவந்தேன்? இன்றைக்கு நான் அடையவிருந்த இருநூறு ரூபாயை இழந்து போகும்படி செய்து விட்டாயே.'

காளி, 'உனக்கு என்னைச் சில வருஷங்களாகத் தெரியும், நான் உன்னை எப்பொழுதாவது ஏமாற்றியிருக்கிறேனா?'

வீரசிங்கம், 'நாமிருவரும் சிலகாரியங்களைச் சேர்ந்து செய்திருக்கிறோம் அவைகளில் நீ யோக்கியமாகவே நடந்திருக்கிறாய்.'

காளி, "இன்று நீ அடையவிருந்த ரூபாய் இருநூறையும், நான் உனக்கு நாளை இரவு ஒன்பதுமணிக்குப் பேயாண்டி கடையிற் கொண்டுவந்து கொடுக்கிறேன்."

வீரசிங்கம், "அப்படியானால் சரி; உன் காரியமெல்லாம் விநோதமாயிருக்கின்றன. நீ எதற்காக அவனைத் தப்பவிட்டாய்?"

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

ட்

# அவதார சமயம்.

மேகங்கள் கறுக்க மழை பெய்கிறது. உணவைக் கொள்ள உடலும் வளருகிறது. தேனுண்டாகத் தேனீயும் ஓடிவருகிறது. கர்ப்பமுண்டாகக் குழந்தையும் வருகிறது. ஆகையால் நிகழ்காலத்தைக்கொண்டு நாம் ஒருவாறு எதிர்காலத்தையும் நிர்மாணிக்கலாம்.

அன்பர்களே! தற்சமயம் உலகம் இருக்கும் நிலைமையை நாம் கவனிப்போம், அந்தோ! உரிமைக்கு உள்ள அதிகாரம் குறைந்திருக்கிறது. பெருமையுள்ள கர்வமென்பது உலாவி வருகிறது. பலமுள்ளவனே சொந்தக்காரனெனத் தெரிகிறது. சுலபநியாயம் என்பது கழன்று வெளியே ஓடிக்கொண்டிருக்கிறது. பலனைக்கருதி, தம் சுயபலனைக் கருதித் தலை காலாகிறது; கால் தலையாகிறது; கருணை மறைகிறது; சிறுமை பெருகிவருகிறது; பலபல இடங்களில் இரத்தம் சிந்துகிறது; உடல்கள் வெட்டுண்டு சாகின்றன; யுத்தம் பெரிதாகிறது. யுத்தம் வெறுப்புறுகிறது.

இம்மட்டோ! மதம், சமது மதம், ஆரியமதம், இந்துமதம், வரவர க்ஷீணித்துவருகிறது. தத்துவ விசாரணை போலியாராய்ச்சியில் அமிழ்கிறது. அவரவரே பரமாத்மா என்ற ஆரம்பமும் வருகிறது. பெரியோர் உண்டோ என்ற சந்தேகமும் உண்டாகிறது. கடவுளைக்கண்டோர் யாரோ? என்ற வினவும் வெளிவருகிறது. நாகரீகம் மேலாடுகிறது. நவநீதம் புளகாங்கிதத்தை உண்டாக்குகிறது. சுவதந்தரியம் பெண்பாலாரிடத்தும் மேலாடுகிறது. பெண்பேச்சே பெரும் பேச்சாகிறது. அதையொட்டியே ஆண்பேச்சும் அமைகிறது. தர்மம் என்றவார்த்தைக்குப் பொருள் தெரிய வியாக்கியானம் வேண்டியதாயிருக்கிறது. தேவஇரகசியமும் தேவசபையும் உண்டோவெனத் தோன்றுகிறது. உண்டெனக்காணும் சிலரிற் பலரும் அரியஹிம்சைக்கு ஆளாக அவற்றை உபயோகப்படுத்துகின்றனர். "கடவுளைத் தியானஞ்செய், நன்மையும் மேன்மையும் நல்ல பலமும் உண்டாகும்" என்று ஒருவர்க்குச் சொன்னால், அவர் அப்படியே கொஞ்சகாலஞ் செய்து, காலம் என்னும் கொடு

மைக்காளாகி, "எனக்கு விரோதியாகிய இன்னாரின்னார் அன்பமுற என்றியானபலம் முழுவதும் அர்ப்பணித்தேன்." என்றகோலத்தில் நுழைகிறார்.

இதையுக்கவிரப் பிறமததூஷணையே பார்க்குமிடமெங்கும்பாவுகிறது. சொல்லுவதற்கும் செய்வதற்கும் எட்டவில்லை, ஆகையால் தேசமும் தத்தளிக்கிறது.

இக்காரணங்களாற் சைவபக்தியும் (மங்கள) இராஜயோகமும் (உத்தம) இருக்குமிடந் தெரியவில்லை. நிற்க, ஒற்றுமை அற்றிருக்கிறது. நமது நாட்டைப் பற்றுதல் உற்றிருக்கிறது. என் செய்யலாம்!

இத்தகைய கோலம் நமக்குத் தெரிவிக்கும் விஷயம் என்ன? இத்தகைய வேஷத்திற்கு முடிவுயாது? யாரால்?

ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற எப்படி ஒரு தலைவர் இருக்கிறாரோ, அப்படியே சிருஷ்டி என்று சொல்லக்கூடிய இப்பெரியகுடும்பத்தைக் காப்பாற்ற ஸர்வ வல்லமையுள்ள ஈசுவரன் ஒருவன் இருக்கிறான். "அவனன்றியோரணுவும் அசையாது". அவனை விவரிக்கவும் நம்மா லியலாது. கருணைக் கடலென்பது அப்பரம தயார்த்ரங்க மூர்த்தியையே. இரக்கம் பிறப்பது அவரிடத்திருந்தே. எவரெவர்க்கு எதுஎது வேண்டியதோ, அவரவர்க்கு அதையதைத் தர்திடும் தாதா அவரே. எவரெவர் எந்தஎந்த உருவத்திற்கூவுகின்றனரோ, அவரவர்க்கு அந்தந்த உருவத்தில் தரிசனந்தருபவர் அவரே. பாரபக்ஷம் என்பது அற்றவர் அப்பரமசிவமே. ஆனாலும் பக்தர்க்குச் சொல்லும்படி யெல்லாந் தொண்டேபுரியுஞ் செய்யும்அன்பு நிலையும் அவரே!

அப்படிப்பட்ட சுயஞ்சோதிப் பிரகாசர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாக அவதரித்துத் திருலீலைசெய்த காலத்தில் அர்ஜுனனுக்கு அரியஉபதேசஞ் செய்யுஞ் சமயத்தில் "ஓ! அர்ஜுனா துஷ்டஸம்ஹாரத்தை முன்னிட்டும் சிஷ்டபரிபாலனத்தை முன்னிட்டும் மதஸ்தாபனத்தை முன்னிட்டும் நான் அடிக்கடி அவதாரமானேன்;

அவதாரமா யிருக்கிறேன்; அவதாரமாவேன்" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பது நினைவுக்கு வருகிறது. "கடவுள் மறுபடியும் அவதாரமாகப் போகிறார். அஞ்சேல்" என்று மகான் விவேகாநந்தர் அங்கே அருளியிருப்பதும் நினைவுக்கு வருகிறது. இன்னும் பல ஞானிகளும் யோகிகளும் பக்தர்களும் அங்கங்கே பல காரணங்களை முன்னிட்டு அவதாரக்குறிப்பை ஆர்ப்பரித்துப் பேசியும் எழுதி வைத்தும் இருக்கின்றனர்.

ஆனபடியால், துணைவர்களே! தற்சமயம் அக்கருணைக்கடல் அவதரிக்கப் போகிறார். அல்லது இப்பொழுது அவதரித்து வளர்ந்து வருகிறார். இனி அவதரித்தாலும் அல்லது இப்பொழுதே அவதரித்திருப்பினும் அவர் வெளிவரும் பருவமொன்று குறிப்பிட்டுஏற்பட்டிருக்கவேண்டுமன்றோ. அவ்விஷயம் தற்சமயம் இருக்கும் அவருடைய பக்தகோடிகளிற் சிலருக்கேனுந் தெரியாமலிருக்கமாட்டாது. அது அவர் வெளிவரும் அப்பொழுது நம்மெல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியவருமன்றோ! உலகுக்கும் முக்கியமான நம்மிந்தியாவுக்கும் அமைதியையும் சமாதானத்தையும் உண்டாக்கிப் பக்தியைப் பெருக்கி, அருளைப்பெருக்க ஆனந்தமூர்த்தி வெளிவருகிறார். எல்லாமதங்களும் கிளைகளெனத் துலங்கும் இந்துமதவிருக்ஷத்தின் கனியைக்காட்ட நித்தியானந்தர் வெளிவருகிறார். உள்ளபடியுள்ள உண்மை யிதுவென்று உள்ளத்தில் உற்பவிக்கச் செய்து அருளைக்காட்டப் பரமஹம்ஸதயாந்தரங்கமூர்த்தி பரிபூரணமாக வெளிவருகிறார். ஞானமென்னும் விவேகத்தைப் பக்தகோடிகளெல்லாரும்பெற்று நல்லவழி உய்யும்வண்ணம் நன்றுபகாரம் விவேகானந்தமயமூர்த்தி விளக்கமான வழியில் வெளிவர வருகிறார்.

இந்தச் சமயத்திற்கு முன்னும்பின்னும் நடுவிலும் இச்சமயத்திலும், நடக்க நிற்கும் அவரது வெளிவருகையின் அறிகுறியெனவோ அருளின் விசேஷமெனவோ, அரியகருணையின் பெருக்கெனவோ அவரது அருமையான பக்தர்கள் முகமாக அவர் ஆவிர்ப்பவமாகிறார்; அவருடைய அம்சம் வெளிவருகிறது.

ஆகவே, இது அவதார சமயம், நல்ல சமயம், நமது துன்பம் மறையும் சமயம்; தேசம் இனி விருத்தியையும் கூடிய சீக்கிரத்தில் அமைதியையும் அடையத் தக்கவழியில் உழைக்கத் தலைவருடன் ஒத்துவேலைபார்க்க உரிய சமயம்; நாம்மெய்ம்மறந்து ஆனந்தக்கூத் தாடத் தக்க தருணம்.

எனவே குவலயத்தோரே! கூவுகின்றேன்!! கூடவாருங்கள்!!! ஓடிவாருங்கள்!!!!

டி. வி. வெங்கடராகவலு ஐயர்,
உபாத்தியாயர், மாடல் ஸெக்ஷன்,
புதுக்கோட்டை.

# உ
# பள்ளிக்கூடத் தோட்டமும்
## அதன் பிரயோஜனமும்.

நண்பர்களே!

சிறுகுழந்தைகளிடம் நூதனமாய் ஒருகாகிதப்பெட்டி அல்லது ஒரு பொம்மை முதலானவற்றைக் கொணர்ந்து வைத்தால் அதை எடுத்து ஆட்டிப்பார்ப்பதையும், 'அதற்குள் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ளுமாறு, பிய்ப்பதற்கு முயலுவதையும் நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். இதனாலேயே சிறுபிள்ளைகளுக்கு ஆராய்ந்தறியும் சக்தி இயற்கையாகவே அமைந்துள்ளதென்று தெரிகிறது.

ஆகையாற் சிறுவர்கட்கு எவ்விஷயத்தைப் போதிப்பதானாலும் எழுத்து மூலமாயும், சொற்கள் மூலமாயும் போதிப்பதினும் ஒவ்வொன்றையும் நேரிற்பார்த்துத்தெரிந்துகொள்ளும்படி பழக்குவோமானால், இவ்வாறு தெரிந்துகொள்ளக் கூடிய விஷயம் எப்போதும் ஞாபகமிருக்கலாம். மேலும் பிள்ளைகளும் ஆவலுடன் கவனிப்பார்கள்.

சிறுவர்கள் கல்வி பயிலும்போதே, பாடசாலைத் தொழில்களுடன் தோட்டவேலையையும் சேர்த்துச்செய்துவருவது சிலாக்கியமாகையால், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பெரிதாக இல்லாவிடினும், சிறிதாகவாவது ஒருபள்ளிக்கூடத்தோட்டம் அவசியம் இருத்தல்வேண்டும். இத்தோட்டத்தின் உதவியினால் தாவரவர்க்கத்தைப் பற்றியவொவ்வொரு பாடத்தையும் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது, பிள்ளைகளைத் தோட்டத்திற்கு அழைத்துப் போய் அவைகளை நேரிற் காண்பித்துப் போதிப்பது மிகவும்சிறந்த வழியாகும். இத்துடன் இயற்கைப் பாடங்களிற் கற்றுக்கொள்ளக் கூடிய விஷயங்களை நேரிற் பரிசீலனைசெய்து தெரிந்துகொள்ளவும் இடந்தரும்.

இஃது இவ்வாறிருக்க நமது பட்டினங்களி லிருக்கும் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்குச் சாதாரணமாய்நெற்பயிர்எப்படிவிளைகின்றதென்றும், எம்மாதிரியிருக்கிறதென்றும் தெரிய அவகாசமிராது. இதற்காகஅம்மாணுக்கர்களைக்கிராமாந்தரஸ்தலங்களுக்குஅனுப்புகிறதா? இவ்விதமான குறையை நமது பள்ளித்தோட்டத்தைக்கொண்டு ஒருவாறு நீக்கலாம். அதாவது நமது பள்ளித்தோட்டத்தில் ஒரு பாகத்தில் (கிணறு இருந்தால் அதன் சமீபத்தில்) கொஞ்சம் நெல்லை விதைத்துப் பிள்ளைகளை அதைக் கவனிக்கச் செய்து, நாளுக்குநாள் உண்டாகும் மாறுதல்களைக் காட்டி அதை ஒருபுஸ்தகத்தில் தேதிவாரியாகக் குறித்துவரச் செய்தால், பிறகு நெற்பயிரைப் பற்றின அறிவு கூடுமானவரை பிள்ளைகளுக்கு நன்கு ஏற்பட்டு விடும்.

மேலும், பள்ளித்தோட்டத்தில் வேலைசெய்து வருவதனால் ஸ்தாவரங்களின் இயற்கை யமைப்பும் பூசாரத்தின் தன்மைகளும் எருவின் உபயோகமும் பிள்ளைகளுக்குப் பிரத்யக்ஷமாய்த் தெரியும். இதுவுமன்றிப் பயிர்களைப் பாதுகாக்கவும், செழுமைபெற வளர்க்கவும் பால்யம் முதலாகவே பயிலுவதற்கு இடந்தருகிறது.

இக்கருத்துக்கொண்டே மேல்நாட்டார் ஒவ்வொருபாடசாலையிலும் பள்ளிக்கூடத்தோட்டம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள்

என்று தெரிகிறது. இதையநுசரித்து நமது வியவசாய இலாகா அதிகாரிகளும், எலிமெண்டரிபாடசாலையின் சேர்க்கையாய் ஒரு தோட்டம் (School Garden) ஏற்படுத்தி வியவசாய ஸம்பந்தமான படிப்பைப் போதிக்கவேண்டும் என்று உரைக்கிறார்கள்.

இவைகளை ஆராயுமளவில், நம்முடையபாடசாலையின் பக்கத்திலுள்ள சொற்பஇடத்திலாவது சிறியதோட்டம் ஒன்று ஏற்படுத்தி, அதில், நமது ஸ்கூலில் வழங்கிவரும் பாடப்புத்தகங்களில் வரக்கூடிய (ஸ்தாவரசம்பந்தமான) பயிர்களையும், அந்தந்தக்கிராமங்களில் விசேஷமாய்ப் பயிரிடக் கூடிய ஸ்தாவரங்களையும், பயிர் செய்து, பிள்ளைகளை ஸரிவரக் கவனிக்கச் செய்து, விளையும் மாதிரிகளையும் அவைகளுக்குச் செய்யப்படும் வேலைகளையும் குறித்துவைக்கச் செய்வோமானால், பாடங்கள்நடத்துவதில், பிள்ளைகள் பாடசம்பந்தமான விஷயங்களை நன்கு அறிந்துகொள்ள ஸாதகமாகும். மேலும் இவ்வாறு அடையக்கூடிய அறிவானது மறவாமல் நிலைபெற்றதாக இருக்கவும் கூடும்.

Kaikurichy }
1—11—17 }

*G. Narayanaswamy Ayer,*
*Headmaster,*
*S. E. School.*

# மதிப்புரைகள்.

தர்மவித்யா ஞானோதய சங்கம்:—

இராமநாதபுரம் ஜில்லா தேவகோட்டையில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் இந்தச் சங்கத்தின் ஆதரவின்மேல் நடந்தேறிவரும் "வைசியமித்திரன் பெண்பாடசாலையின் முதல்வருட அறிக்கைப் பத்திரம்" ஒன்று நமக்குக் கிடைத்தது. இந்தப் பெண்பாடசாலை 1915ளு அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பெற்றதென்றும், இதனையொட்டியே செந்தில்ராஜன் பெண்பாடசாலை என்னு பெயருடைய பெண்பாடசாலை யொன்றும் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிற

தென்றும், ஷண்முகநாதபுரத்திலும் ஒரு பெண்பாடசாலை யேற்படப் போகிறதென்றும், இவற்றின் காரியதரிசிகள் தக்கவர்களாக அமைக்கப்பெற்றுத் தக்க பிரபுக்களாலும் ஆதரிக்கப்பெற்று வருவதால் நாளடைவில் விருத்தியடைந்துவரு மென்றும் நம்புகிறோம். இந்த வைசியமித்திரன் பெண் பாடசாலையில் ஆரம்பமுதல் சென்ற டிசம்பர்மீ முடியச் சேர்ந்த குழந்தைகளின் மொத்தசங்கியை 145 ஆகும். இதில் வைசியப் பெண்கள் 68, பிராமணப் பெண்கள் 66, இதரஜாதிப் பெண்கள் 11 என்றும், தற்காலம் இருக்கும் மொத்த சங்கியை 57 என்றும், இதில் பாலர் வகுப்பிலிருந்து மூன்றுவது வகுப்புவரை நடந்து வருகின்றன வென்றும் தெரிகிறது. இதனை நடத்திவரும் தர்மவித்யா ஞானோதய சங்கத்தின் நோக்கமாவது:- தனவைசியர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஸ்திரமாக வசிக்குமிடங்களிலும் இதன் கமிட்டி மெம்பர்கள் யுக்தமெனத் தீர்மானிக்கும் மற்ற இடங்களிலும் சிறுவர் சிறுமிகளுக்கு இலவசமாகக் கல்வி பயிற்றுவிப்பதும் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டிய காரியங்களைச் செய்வதுமாகும். இச்சங்கத்திற்கு "வைசியமித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் சித. ராமநாதன்செட்டியாரவர்கள் ஆனரரி கௌரவ காரியதரிசியாக இருந்து சங்கத்தின் காரியங்களை நிர்வகித்து வருவார். சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய செலவுகளுக்காகக் கீழ்க்கண்டவிதமாய்ப் பணம் சேகரிக்கப்பெறும்:—இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தனவைசியர்கள் செய்துவரும் லேவாதேவி வர்த்தக ஸ்தானங்களிலும் தொழிற்சாலைகளிலும் மற்றும் அபிமானஸ்தர்களிடத்திலும் உண்டிப் பெட்டிகள் வைத்து அவற்றில் ஒவ்வொரு விலாஸதாரும் தினசரி காலணா விதமோ அதிகமாகவோ போட்டுவந்து வருஷத்திற்கொருமுறை அந்த உண்டிப் பெட்டிகளிற் சேரும் தொகையையும், யாரும் நன்கொடை கொடுக்கும் தொகைகளையும் சங்கத்தின் காரியதரிசி பேருக்கு அனுப்பிவர வேண்டியதென்று ஏற்பாடுசெய்யப் பெறும். மேற்கண்ட விதமாய்ச் சேரும் மொத்தத்தொகையில் நான்கிலொருபங்கைச் சங்கத்தின் மூலதனத்திற்கென்று கமிட்டி மெம்பர்களால் தீர்மானிக்கப்பெறும் இடங்களில் வட்டிக்குப்போட்டு

வைத்துப் பாக்கித் தொகையைக் கமிட்டி மெம்பர்களால் அங்கீகரிக்கப்பெறும் வேறு இடத்திற் கொடுத்துவைத்துக் கமிட்டி மெம்பர்கள் தீர்மானிக்கிறபடி சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றும்படியான மார்க்கங்களிற் செலவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. எனவே இச்சங்கம் நன்னோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பெற்றுத் தக்க பிரபுக்களாலும் ஆதரிக்கப்பெற்றும் வருவதால் நன்றாய் நடைபெற்று உயர்ந்தேறும் என்று உறுதியாக எண்ணுகிறோம். எல்லாம் வல்ல இறைவனும் அருள்புரிக.

தமிழர்நேசன்—இப்பெயர்கொண்ட பத்திரிகையொன்று கிடைக்கப்பெற்றோம். இது தக்க பிரமுகர்களும் ஜனத்தலைவர்களும் ஆனவர்களால் ஆரம்பிக்கப் பெற்று, இதனை நடத்தவும் தமிழர்க்குரிய நன்மையைத் தேடவும் "தமிழர் கல்விச்சங்கம்" என்ற ஒரு சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. இச்சங்கமும் சென்னை மாநகரில் ஸ்தாபிக்கப்பெற்றுப் பத்திரிகையும் அங்கிருந்தே வெளியாகியும் வருகின்றது. இச்சங்கத்துக்கு மேலதிகாரிகளாகக் கனம் ஜஸ்டிஸ் சதாசிவையர், கனம் ராமநாதபுரம் ராஜா அவர்கள், கனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள், திவான்பகதூர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளை, ராவ் பகதூர் பவாநந்தம்பிள்ளை, மிஸ்டர். கே. பி. ராமநாதன் எம். ஏ, மிஸ்டர் டி. வி. கோபாலசாமி முதலியார், மிஸ்டர் டி. ஆர். வெங்கடராமசாஸ்திரிகள், சுதேசமித்திரன் ஆசிரியர் முதலியவர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். தமிழிலும் தமிழ்நாட்டிலும் அபிமானமுள்ளவர்கள் இச்சங்கத்திற் சேர்ந்து இதனை வலியுறுத்திவரவேண்டுவது அவசியமே. சங்கத்தின் பங்கொன்றுக்கு 50 ரூபாய் மதிப்பேற்பட்டிருக்கிறதாயினும் சேரும்போது 10 ரூபாய்கொடுத்தாற் போதுமானது. பாக்கித்தொகையின் அவசியம் உடனே ஏற்படமாட்டாதென்று சங்கஸ்தாபகர்கள் நினைக்கிறார்களென்றும் தெரியவருகிறது. பத்திரிகையின் முதல் ஸஞ்சிகையாகிய ஆவணியீ ஸஞ்சிகையில், "பிரகிருதியில் மனிதனுடைய ஸ்தானம்" என்பதைப்பற்றி மிஸ்டர் ஏகாம்பரநாதன் எம். ஏயும், "ரஸாயனசாஸ்திரத்"தைப்பற்றி மிஸ்டர் வீரராகவையர் எம். ஏயும், "பதார்த்தகுணநிசயங்க"ளைப்பற்றி மிஸ்டர் அரங்கபத்மநாபராவ் எம். ஏ. எல. டி. யும், 'வைசூரி'யைப்

பத்தி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் எம். பி யும், 'ஐரோப்பா கண்டத்தின் பழைய சரித்திரம்' என்பதைப்பற்றி மிஸ்டர் டி. எஸ். சுப்பிரமணியஐயர் எம். ஏயும், 'சுவாதிசரிதை யை' மிஸ்டர் அ. மாதவையாவும், 'மாடுகளை விருத்தியாக்கி வளர்ப்பது' என்பதைப்பற்றி மிஸ்டர் சுப்பிரமணியமுதலியாரும், 'அரிச்சந்திரன்' கதையை நாடகரூபமாக ராவ்பகதூர் பவானந்தம்பிள்ளை அவர்களும் நன்றாகவும் விளக்கமாகவும் எளியநடையில் எழுதியிருக்கிறார்கள். இருபாலாரும் படித்து அறிந்துகொள்ளத் தக்கதே. 88 பக்கங்களும் சித்திரப்படங்களும் கொண்டுள்ளது. இப்பத்திரிகைக்கு வருஷ சந்தா மூன்றே ரூபாய்தான். வேண்டுவோர் காரியதரிசி மூலம் பெறலாம்.

தொழில்;—இதனது ஐப்பசி மாதத்து ஸஞ்சிகை வரப்பெற்றோம். இதனுள் வழக்கம்போலப் பலதொழின்முறைகள் விவரிக்கப் பெற்றிருக்கின்றன. 'இரும்பு எஃகுதொழிலின் சரித்திரம்' 'தேங்கா யெண்ணெயிலிருந்து வெண்ணெயுண்டாக்கல்' என்னும் விஷயங்கள் நன்றாகவும் அநுபவ முறையாகவும் எழுதப் பெற்றிருக்கின்றன.

கமலாஸனி:—இதனது ஐப்பசிமாதத்து ஸஞ்சிகையாகிய இதனுள் பல அரியவிஷயங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. "காவிரிப் பூம்பட்டின சரித்திரம்" நல்லஆராய்ச்சியுடன் எழுதப் பெற்றிருக்கிறது.

பிரஜாநுகூலன்:—இதனது நவம்பர் மாதத்து ஸஞ்சிகையுள் இதனது பத்திராதிபர் மனோதத்வ முன்னேற்றத்துக்கு வேண்டிய குறிப்புகளை எழுதியிருப்பதுடன், தாம் திராவிடாபிமானியில் சம்பந்தத்திலிருந்து விலகிக்கொண்டுள்ள விஷயத்தையும் குறித்திருக்கிறார்.

பூரணசந்திரோதயம்:—இதனது ஐப்பசி மாதத்துச் சஞ்சிகை வரப் பெற்றோம். இதனுள் பல அரியவிஷயங்கள் தக்கவர்களால் எழுதப் பெற்றிருக்கின்றன. "பிரபத்திவித்யை" என்னும் அரிய விஷயம் நன்றாக எழுதப்பட்டு வருகிறது.

கோதுகு கோல்லி:—இது ஒரு சூரணம். இந்தப் பொடியை உபயோகித்தால் கொசுக்கள், நாளடைவில்வாராமல் ஒழிகின்றன.

இதனை யநுபவத்தில் கண்டோம். இந்தப்பொடியில் பூச்சிகளைக் கொல்லும் பலமருந்துச்சரக்குகளும் வாசனைச்சாமான்களுஞ்சேர்ந்திருக்கின்றன. இதன் புகையினால் நிறைந்துள்ள இடம் சுவாலையாலும் நிறைந்திருக்கும். ஒரு இருப்புச்சட்டியில் நெருப்புத் தணல்கொண்டு கொசுஉள்ளவிடத்தில் வைத்துப்பொடியைத் தூவி விட்டால் உள்ளகொசுக்கள் அழிவதுடன் வெளிக்கொசுக்களும வாரா. அறைகளும் அடிக்கடி சுத்தப்படுத்தப்படல் நலமேயாகும். இதன்விலை பொட்டணம் ஒன்றுக்கு அணா 8. வேண்டுவோர் R. R. கோபாலராவ் ஜர்னலிஸ்ட் காரைக்குடி என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ:

## பலவகைக் குறிப்புகள்.

திருநெல்வேலிஜில்லா பாளையங்கோட்டையில் உள்ள சி. எம். எஸ். குருட்டுப்பெண்களின் பள்ளிக்கூடத்துக்காக ஒரு வைத்தியசாலை கட்டிக்கொள்ளும்பொருட்டு அரசாங்கத்தார் 28—9—17-ல் ரூ 4190-வரையில் ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

சித்தூரிலுள்ள உபாத்தியாயினிப்பள்ளிக்கூடமாகிய அமெரிக்கன் ஆர்க்காட்டு மிஷன் ட்ரெயினிங் ஸ்கூலைப் பெரிதாகக் கட்டிக்கொள்ளும்பொருட்டு அரசாங்கத்தார் 6—10—17-ல் ரூ 6445— ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

மதுரையிலுள்ள பசுமலை அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூலுக்கு ஒரு குளமும் கக்கூசும் கட்டிக்கொள்வதற்கென்று அரசாங்கத்தாரால் 22—10—17-ல் கட்டடச் செலவில் பாதிக்கு மேற்படாமலும் ரூ 4185-க்கு மேற்படாமலும் இருக்கும் தொகை ஸாங்ஷன் செய்யப் பெற்றிருக்கிறது.

உ

## விடுக்கதை வினா.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

அஞ்செழுத்தா லொருபெயரா மதனிடையா மக்கார மகன்றால் வெற்பாம்
விஞ்சுமுன்மூன் றெழுத்தினதேல் விரிதுகிலா முதலிரண்டும் விரவக் காணில்
எஞ்சலில்லா வொளிபரப்பு மிரதமினா மீரதவிரண் டெழுத்து நீங்கின்
வஞ்சியர்க விடைக்கணிபூ ணதுவிதனைத் தெரிவுபெற வரைவீர் மன்னோ.

— சி. மு. பழநியப்பன்
க. வி. கலாசாலை மாணவன்
கோனாபட்டு.